# PART - III

# பொருளியல் / ECONOMICS

( தமிழ் மற்றும் ஆங்கில வழி / Tamil & English Version)

காலஅளவு : 2.30 மணி நேரம் ] [ மொத்த மதிப்பெண்கள் : 90

Time Allowed : 2.30 Hours ] [ Maximum Marks : 90

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

**Instructions :** (1) Check the question paper for fairness of printing. If there is any lack of fairness, inform the Hall Supervisor immediately.

(2) Use **Blue** or **Black** ink to write and underline and pencil to draw diagrams.

## பகுதி - I / PART - I

குறிப்பு : (i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **20x1=20**

(ii) கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

**Note :** (i) Answer **all** the questions.

(ii) Choose the most appropriate answer from the given **four** alternatives and write the option code and the corresponding answer.

1. 'பொருளியல் என்பது செல்வத்தைப் பற்றிய ஓர் அறிவியல்' என வரையறுத்தவர் யார் ?

(அ) கார்ல் மார்க்ஸ் (ஆ) பால் அ. சாமுவேல்சன்

(இ) மாக்ஸ் முல்லர் (ஈ) ஆடம் ஸ்மித்

Who defined "Economics as the Science of Wealth" ?

(a) Karl Marx (b) Paul A. Samuelson

(c) Max Muller (d) Adam Smith

2. பயன்பாடு என்பது :

(அ) பண்டங்களின் மொத்த மதிப்பு

(ஆ) பண்டங்கள் மற்றும் பணிகளுக்கான விருப்பம்

(இ) தேவையும், அளிப்பும் சமமாக இருக்கும் சமநிலைப் புள்ளி

(ஈ) மனித விருப்பங்களை நிறைவு செய்யும் பண்டங்கள் மற்றும் பணிகள் சக்தி

Utility means __________.

(a) Total value of commodity

(b) Desire for goods and services

(c) Equilibrium point at which demand and supply are equal

(d) Want satisfying capacity of goods and services

3. நுகர்வோர் எச்சம் ₹ 75 ஆகவும், உண்மை விலை ₹ 372 ஆகவும் உள்ளது எனில், தகு விலையினை காண்க.

(அ) 447 (ஆ) 50 (இ) 375 (ஈ) 474

Given the consumer's surplus is ₹ 75 and the actual price is ₹ 372, find the potential price.

(a) 447 (b) 50 (c) 375 (d) 474

4. எந்தக் காரணி சமுதாய மாற்றம் உருவாக்கும் முகவர் என்று அழைக்கப்படுகிறது ?

(அ) தொழிலமைப்போர் (ஆ) மூலதனம்

(இ) உழைப்பாளர் (ஈ) நிலம்

Which factor is called the changing agent of the society ?

(a) Organizer (b) Capital

(c) Labour (d) Land

5. கீழ்க்கண்டவற்றுள் எது நிலத்தின் சிறப்பியல்பு அல்ல ?

(அ) பல வகைப்படும் (ஆ) இயற்கையின் கொடை

(இ) குறை அளிப்பு (ஈ) இயங்கும் தன்மையுடையது

Which of the following is not a characteristic of Land ?

(a) Heterogeneous (b) Gift of Nature

(c) Its Limited Supply (d) It is Mobile

6. $\alpha+\beta=1$ குறிப்பிடுவது ________.

(அ) வளர்ந்து செல் விகித விளைவு (ஆ) மாறாத விகித விளைவு

(இ) குறைந்து செல் விகித விளைவு (ஈ) ஏதுமில்லை

$\alpha+\beta=1$ refers ________.

(a) Increasing returns to scale (b) Constant returns to scale

(c) Diminishing returns to scale (d) None

7. சராசரி மாறும செலவுககான வாய்ப்பாடு ________.

(அ) TFC/Q (ஆ) TAC/Q (இ) TC/Q (ஈ) TVC/Q

Formula for estimating average variable cost.

(a) TFC/Q (b) TAC/Q (c) TC/Q (d) TVC/Q

8. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (1) | வெளிப்படையான செலவு | (i) | ஏட்டுச் செலவு |
| (2) | உள்ளார்ந்த செலவு | (ii) | வெளிச் செலவு |
| (3) | சமூகச் செலவு | (iii) | பரிமாற்ற செலவு |
| (4) | வாய்ப்புச் செலவு | (iv) | பண செலவு |

(a) (1) - (iv) (2) - (i) (3) - (iii) (4) - (ii)

(b) (1) - (iv) (2) - (i) (3) - (ii) (4) - (iii)

(c) (1) - (ii) (2) - (iii) (3) - (iv) (4) - (i)

(d) (1) - (iii) (2) - (iv) (3) - (i) (4) - (ii)

Match the following :

| | | | |
|---|---|---|---|
| (1) | Explicit Cost | (i) | Book Cost |
| (2) | Implicit Cost | (ii) | External Cost |
| (3) | Social Cost | (iii) | Transfer Cost |
| (4) | Opportunity Cost | (iv) | Money Cost |

(a) (1) - (iv) (2) - (i) (3) - (iii) (4) - (ii)

(b) (1) - (iv) (2) - (i) (3) - (ii) (4) - (iii)

(c) (1) - (ii) (2) - (iii) (3) - (iv) (4) - (i)

(d) (1) - (iii) (2) - (iv) (3) - (i) (4) - (ii)

9. "நிறைகுறை போட்டி" எனும் கருத்தை அறிமுகப்படுத்தியவர் ________.

(அ) ஜே.எம். கீன்ஸ் (ஆ) இர்விங் ஃபிஷர்

(இ) மார்ஷல் (ஈ) ஜோன் ராபின்சன்

The concept of imperfect competition was propounded by ________.

(a) J.M. Keynes (b) Irving Fisher

(c) Marshall (d) Joan Robinson

10. இருவர் முற்றுரிமையின் பண்புகளைப் பற்றிய தவறான கூற்றைக் கண்டுபிடிக்கவும் :

(அ) உற்பத்தி பண்டங்கள் வேறுபடும்.

(ஆ) அவர்கள் தங்கள் உற்பத்தி பண்டத்திற்கு அதிக லாபம் பெறும் பொருட்டு விலையை நிர்ணயிப்பர்.

(இ) ஒவ்வொரு விற்பனையாளரும் போட்டியாளரின் நோக்கம் மற்றும் செயல்பாடுகளை முழுமையாக அறிந்திருப்பார்.

(ஈ) விற்பனை தொடர்பான அனைத்திலும் இரண்டு விற்பனையாளரும் உடன்பாடு செய்திருப்பர்.

Identify the wrong statement about the features of Duopoly.

(a) There is product differentiation.

(b) They fix the price for their product to maximise their profit.

(c) Each seller is fully aware of his rival's motive and actions.

(d) Both sellers may collude regarding the sale of commodity.

11. 'ஓர் உற்பத்தியாளர் ஒப்பந்தத்தின் மூலம் உழைப்பாளி தன் பணியை வழங்கியதற்காக கொடுக்கும் மொத்த பணமே கூலியாகும்' எனக் கூறியவர் :

(அ) வாக்கர் (ஆ) மார்ஷல் (இ) ரிக்கார்டோ (ஈ) பென்ஹாம்

"Wages is a sum of money paid under contract by an employer to a worker for the services rendered". - Who said this statement ?

(a) Walker (b) Marshall (c) Ricardo (d) Benham

12. இந்திய இரயில்வே முதலில் Wi-Fi வசதியை ________ -ல் தொடங்கியது.

(அ) பெங்களூரு (ஆ) சென்னை (இ) டெல்லி (ஈ) மும்பை

The first Wi-Fi facility was provided by Indian Railways in ________.

(a) Bengaluru (b) Chennai (c) Delhi (d) Mumbai

13. மக்கள் தொகை அடர்த்தி எனபது :

(அ) மக்கள் தொகை / குறிப்பிட்ட நில் அளவு

(ஆ) மக்கள் தொகை / வேலைவாய்ப்பு

(இ) நிலத்தின் அளவு / மக்கள் தொகை

(ஈ) நிலத்தின் அளவு / வேலைவாய்ப்பு

Density of Population =

(a) Total Population/Land Area of the Region

(b) Total Population/Employment

(c) Land Area/Total Population

(d) Land Area/Employment

14. இந்தியாவின் மிகப் பழமையான பெரிய அளவிலான தொழில் ________.

(அ) எஃகு (ஆ) சிமெண்ட் (இ) பருத்தி (ஈ) சணல்

The oldest large scale industry in India is ________.

(a) Steel (b) Cement (c) Cotton (d) Jute

15. பன்னிரண்டாம் ஐந்தாண்டுத் திட்டகாலம் :

(அ) 2007 - 2012 (ஆ) 1997 - 2002 (இ) 2012 - 2017 (ஈ) 2002 - 2007

Twelfth Five year plan period ________.

(a) 2007 - 2012 (b) 1997 - 2002 (c) 2012 - 2017 (d) 2002 - 2007

16. உலக அளவில் இந்தியா ________ உற்பத்தியில் மிகப்பெரிய உற்பத்தியாளராக விளங்குகின்றது.

(அ) பெட்ரோல் (ஆ) டீசல் (இ) பழங்கள் (ஈ) தங்கம்

India is the largest producer of ________ in the World.

(a) petrol (b) diesel (c) fruits (d) gold

17. 'இந்தியா கிராமங்களில் வாழ்கிறது' என கூறியவர் :

(அ) V.K.R.V. ராவ் (ஆ) J.C. குமரப்பா

(இ) மகாத்மா காந்தி (ஈ) ஜவஹர்லால் நேரு

'India lives in Villages', said by________.

(a) V.K.R.V. Rao (b) J.C. Kumarappa

(c) Mahatma Gandhi (d) Jawaharlal Nehru

18. ________ என்பது சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு கடன் மற்றும் பிற உதவிகளை வழங்குவதன் மூலம் ஊரக பொருளாதாரத்தை மேம்படுத்த அமைக்கப்பட்டன.

(அ) MUDRA வங்கி (ஆ) RRB (இ) SHG (ஈ) NABARD

________ are set up with a view to develop rural economy by providing credit and other facilities to small and marginal farmers.

(a) MUDRA Bank (b) RRB (c) SHG (d) NABARD

19. கீழ்க்கண்டவற்றுள் தவறான இணை எது ?

(அ) SAIL - சேலம்

(ஆ) காற்றழுத்த விசைக்குழாய் நகரம் - கோயம்புத்தூர்

(இ) BHEL - திருச்சி

(ஈ) பின்னலாடைகளின் நகரம் - கரூர்

Which of the following is wrongly matched ?

(a) SAIL - Salem

(b) The Pump city - Coimbatore

(c) BHEL - Trichy

(d) Knitting city - Karur

20. முதன் முதலின் கணித முறைகளைப் பயன்படுத்தி பொருளியல் கருத்துக்களை எழுதியவர் ?

(அ) G. கிராமர் (ஆ) பால் சாமுவேல்சன்

(இ) சர் வில்லியம் பெட்டி (ஈ) ஜியோவானி செவா

The first person to apply mathematical method to economic problem was ________.

(a) G. Crammer (b) Paul Samuelson

(c) Sir William Petty (d) Giovanni Ceva

## பகுதி - II / PART - II

ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். அவற்றில் வினா எண் 30 -க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.

Answer any seven in which Q. No. 30 is compulsory. **7x2=14**

21. ஆல்ஃபிரட் மார்ஷலின்படி நுகர்வோர் உபரியை வரையறுக்கவும்.
Define Consumer's Surplus according to Alfred Marshall.

22. மூழ்கும் செலவுகள் என்றால் என்ன ?
What is meant by Sunk Cost ?

23. இலாபத்தின் வகைகள் யாவை ? அவற்றை விளக்குக.
What are the kinds of profit ? Explain them.

24. நிதி ஆயோக் என்றால் என்ன ? அதன் பணிகள் யாவை ?
What is NITI Aayog ? What are its functions ?

25. முன்னேறிய பொருளாதாரத்தின் ஏதேனும் நான்கு இயல்புகளை கூறுக.
State any four features of developed economy.

26. முதலீட்டை திரும்பப் பெறுதல் - வரையறுக்கவும்.
Define disinvestment.

27. குடிசை தொழிலின் சிறப்பியல்புகளில் ஏதேனும் இரண்டினை கூறுக.
Define Cottage Industry. State any two characteristics of cottage industries.

28. பயிர் காப்பீடு என்றால் என்ன ?
What is crop insurance ?

29. $A=\begin{pmatrix} 3 & 4 \\ 10 & -2 \end{pmatrix}$ என்ற அணியின் அணிக்கோவை மதிப்பு காண்க.

Find the value of the determinant for the matrix $A=\begin{pmatrix} 3 & 4 \\ 10 & -2 \end{pmatrix}$.

30. தமிழ்நாட்டின் கனிம வளங்கள் குறித்து சிறு குறிப்பு வரைக.
Write short notes on mineral resources of Tamil Nadu.

## பகுதி - III / PART - III

ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். அவற்றில் வினா எண் 40 -க்கு கட்டாயம் விடையளிக்கவும். **7x3=21**

Answer **any seven** questions in which Q. No. 40 is **compulsory.**

**31.** நுண்ணியல் மற்றும் பேரியல் பொருளியலுக்கு இடையேயான வேறுபாடுகள் யாவை ?

What are the differences between micro-economics and macro-economics ?

**32.** மனித விருப்பங்களின் இயல்பைக் கூறுக.

Describe the features of human wants.

**33.** கொடுக்கப்பட்ட அட்டவணையில் விடுபட்ட இறுதிநிலை உற்பத்தி, சராசரி உற்பத்தியை கண்டுபிடிக்க.

| மாறும் உள்ளீடுகளின் அலகுகள் (L) | மொத்த உற்பத்தி (TP) | இறுதிநிலை உற்பத்தி (MP) | சராசரி உற்பத்தி (AP) |
|---|---|---|---|
| 1 | 2 | 2 | ? |
| 2 | 6 | 4 | 3 |
| 3 | 12 | ? | ? |
| 4 | 16 | ? | ? |
| 5 | 18 | ? | 3.6 |
| 6 | 18 | 0 | 3 |
| 7 | 16 | −2 | 2.28 |

Find out the missing Marginal Product and Average Product for the given table.

| Units of Variable Factor (L) | Total Product (TP) | Marginal Product (MP) | Average Product (AP) |
|---|---|---|---|
| 1 | 2 | 2 | ? |
| 2 | 6 | 4 | 3 |
| 3 | 12 | ? | ? |
| 4 | 16 | ? | ? |
| 5 | 18 | ? | 3.6 |
| 6 | 18 | 0 | 3 |
| 7 | 16 | −2 | 2.28 |

34. வாய்ப்புச் செலவை எடுத்துக்காட்டுடன் வரையறு.
Define opportunity cost with an example.

35. வாங்குவோர் முற்றுரிமை (Monopsony) என்றால் என்ன ?
What is Monopsony ?

36. இயற்கை வளங்களின் வகைகள் யாவை ?
What are the types of Natural resources ?

37. MUDRA வங்கியின் நோக்கங்களை பட்டியலிடுக.
List out the objectives of MUDRA BANK.

38. தமிழ்நாட்டின் ஜவுளித்துறை முன்னேற்றம் பற்றி விவரி.
Describe the development of Textile industry in Tamil Nadu.

39. $16x-4=68+7x$ என்றால் தேவையளவு $x$ மதிப்பினை தீர்க்க.
Solve for $x$ quantity demanded if $16x-4=68+7x$.

40. வாரத்திற்கும், போலி வாரத்திற்கும் உள்ள வேறுபாடுகளை எழுதவும்.
Differentiate between Rent and Quasi-Rent.

## பகுதி - IV / PART - IV

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். 7x5=35

Answer **all** the questions.

41. உற்பத்தி வாய்ப்பு வளைகோட்டைக் கொண்டு, பொருளாதாரத்தின் அடிப்படைப் பிரச்சனைகளை விவரி.

அல்லது

தமிழ்நாட்டின் பொதுத்துறை போக்குவரத்து முறையினை விளக்குக.

Explain basic problems of the economy with the help of Production Possibility Curve.

OR

Explain the public transport system in Tamil Nadu.

42. தேவை விதியை வரைபடத்துடன் விவரிக்கவும்.

**அல்லது**

ரிகார்டோவின் வாரக் கோட்பாட்டை எடுத்துக்காட்டுடன் விவரிக்கவும்.

Explain the law of demand with a diagram.

**OR**

Illustrate the Ricardian theory of Rent.

43. சம அளவு உற்பத்திக் கோட்டின் பண்புகளை வரைபடத்துடன் விவரிக்கவும்.

**அல்லது**

தமிழ்நாட்டின் தொழில் கொத்து - விவரி.

Describe the properties of Iso-quants with the help of diagrams.

**OR**

Explain about the Industry clusters in Tamil Nadu.

44. பல்வேறுபட்ட விலை நிலைகளில் AR மற்றும் MR கோடுகளுக்கிடையேயான தொடர்பை விளக்குக.

**அல்லது**

$P=35-2x-x^2$ ஆகவும் தேவை $x_0$ என்பது 3 ஆகவும் அமையுமெனில் நுகர்வோர் உபரி என்ன ?

Bring out the relationship between AR and MR curves under various price conditions.

**OR**

If the demand function is $P=35-2x-x^2$ and the demand $x_0$ is 3, what will be the consumer's surplus ?

45. சில்லோர் முற்றுரிமையின் பண்புகளை விளக்குக.

**அல்லது**

காந்தியப் பொருளாதாரக் கருத்துகளை சுருக்கமாக எழுதுக.

Explain the features of Oligopoly.

**OR**

Write a brief note on the Gandhian economic ideas.

46. வணிக வங்கிகள் தேசியமயமாக்கப்பட்டதன் நோக்கங்களை விவரி.

அல்லது

பொருளியல் துறையில் தகவல் தொழில்நுட்பங்கள் (ICT) எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன ?

Explain the objectives of nationalization of commercial banks.

OR

How are the Information and Communication Technologies (ICT) used in economics ?

47. சிறப்பு பொருளாதார மண்டலங்களின் (SEZ) நோக்கங்களையும், பண்புகளையும் விளக்குக.

அல்லது

ஊரகக் கடன்களுக்கான காரணங்களை ஆராய்க.

Explain the objectives and characteristics of Special Economic Zones (SEZ).

OR

Analyse the causes for Rural Indebtedness.

-oOo-